


Our Chezhumai is given to the Small Groups in bilingual format (English and Tamil)

எங்களது செழுமை மாத இதழ் ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் சிறுகுழுக்களுக்கு கொடுக்கப்படுகிறது



Cognizant employees enjoying planting in TIST Program

**Few Best Practices**

1. Using the naturally fallen teak leaves as natural manure
2. Attending all the Node meetings with out fail
3. Introducing new farmers to TIST Program
4. Prepare seedlings with minimum cost in your own land
5. Following the best practices learnt from TIST Node
6. Do all the activities after good planing and with full zeal

## சிறந்த பயிற்சி முறைகள்

1. உதிரும் தேக்கு இலைகளை இயற்கை தழை சத்தாக பயன்படுத்துவது
2. கணுகூட்டங்களில் தவறாமல் கலந்து கொள்வது
3. புதிய விவசாயிகளை TIST திட்டத்தில் சேர்ப்பது
4. மரக்கன்றுகளை குறைந்த செலவில் அவரவர் தோப்புகளிலேயே தயாரிப்பது
5. சிறுகுழுக்கள் கூட்டத்தில் பேசப்பட்ட நல்ல செயல்முறைகளை செயல்படுத்துவது.
6. எல்லா காரியத்தையும் நல்ல திட்டமிட்டு ஆர்வத்தோடு செய்வது

## Renugambal Small Group of Arani Center

We joined in TIST Program in Arani Center during 2008 as Renugambal Small Group. We have trees like teak and kumil in our groves namely, Malar, Mathan, Nagaraj, Prakasham and Sambath. Totally we have 2,042 trees with us and we are monitoring the trees carefully. We participate in all TIST Node meetings, learn the best practices and implement the same in our group. We collect all the naturally fallen dry leaves of teak trees and use them as natural manure for the trees. We received free seedlings from TIST, the same way we helped few more farmers in our village to get free seedlings from TIST and joined all the farmers in TIST Program. Now we have organized to have a Node meeting in our village.

## ஆரணி மையத்தில் ரேணுகாம்பாள் சிறு குழு

ஆரணி மையத்தில் கடந்த அக்டோபர் 2008–ல் ரேணுகாம்பாள் சிறு குழுவாக TIST திட்டத்தில் இணைத்தோம் எங்கள் குழுவில் மலர், மதன், நாகராஜ், பிராகாஷசம், சம்பத் என்ற ஐந்து தோட்டத்தில் தேக்கு, குமிழ் தேக்கு மொத்த மரக்கன்றுகள் 2,042 மரங்கள் வைத்து சிறப்பான முறையில் பாதுகாத்து வருகின்றோம். ஒவ்வொரு மாதமும் நடக்க கூடிய TIST–கணுக்கூட்டத்தில் கலந்து கொண்டு அவற்றில் கூறப்படும் புதிய கருத்துக்களை எங்கள் குழுவில் செயல்படுத்துகின்றோம். எங்கள் மரத்தில் இருந்து உதிரும் தேக்கு இலைகளை மக்க வைத்து அவற்றையே நாங்கள் இயற்கை தழை சத்தாக செயல்படுத்துகிறோம். நாங்கள் TIST திட்டத்திடமிருந்து இலவசமாக வழங்கிய தேக்கு செடிகளை நாங்கள் பெற்றது போல் எங்கள் ஊரில் பல்வேறு புதிய விவசாயிகளுக்கு இலவச தேக்கு செடிகளை TIST திட்டத்திடமிருந்து பெற்று எங்கள் ஊரில் புதிய கணுக்கூட்டத்தை ஏற்படுத்தியுள்ளோம்



Members of Renugambal Small Group / ரேணுகாம்பாள் சிறு குழு உறுப்பினர்கள்

## Puvaneshvaran Small Group of Villu-Gingee Center

Best practices of Puvaneshvaran Small Group of Villu-Gingee Center. This small group has members from two families namely Kathirvel and Annamalai. They joined in TIST Program, planted trees and monitoring it. The members follow the natural way in all their farming activities. The trees in their groves are growing very fast. The members show great interest towards tree planting activities and they remain as an example in farming and planting activities in their own village and surrounding villages. They develop their own nursery with lot of seedlings and they keep increasing their trees by planting the seedlings. The members of this group participate in all TIST Node and Training meetings regularly. They are receiving TIST payment for all their live trees.

## புவனேஸ்வரன் சிறுகுழு விழுப்புரம் மாவட்டம்

விழுப்புரம் மாவட்டம் மேல் சித்தாமூர் கிராமத்தில் புவனேஸ்வரன் சிறு குழுவின் சிறப்பான செயல்பாடுகள். இந்த சிறுகுழுவில் கதிர்வேல் மற்றும் அண்ணாமலை என்ற இரு குடும்பங்களும் TISTல் இணைந்து தங்கள் தோட்டத்தில் மரக்கன்றுகள் வளர்த்து வருகின்றனர். இவர்கள் இயற்கைமுறையில் முழுமையாக விவசாயம் செய்கின்றனர். இவர்களின் தோட்டத்தில் உள்ள மரக்கன்றுகள் மிகவும் வேகமாக வளர்கின்றது. இவர்கள் மரக்கன்றுகளை வளர்பதில் மிகுந்த ஆர்வம் காட்டுகின்றனர் இவர்கள் ஊர் மற்றும் ஊரைச் சுற்றியுள்ள விவசாயிகளுக்கு முன்னுதாரனமாக திகழ்கின்றர். அதுமட்டுமல்லாது இவர்கள் சொந்தமாக தங்களுக்கு தேவையான கன்றுகளை இவர்களே உற்பத்தி செய்து தோட்டத்தில் வைத்து மரக்கன்றுகளின் எண்ணிக்கையைப் பெறுக்குகின்றனர். இவர்கள் அனைத்து கணுக்கூட்டத்திலும் மற்றும் பயிற்சி முகாம்களிலும் தவறாமல் ஆர்வத்துடன் கலந்துகொண்டு TIST-ன் ஊக்கத் தொகையையும் பெறுகின்றனர்.



Tree grove of Puvaneshwaran Small Group / புவனேஸ்வரன் சிறுகுழுவின் தோப்பு

## Cognizant and TIST Tree Planting India Private Limited Launch the 100,000 Tree Planting Program

Cognizant celebrated World Environment Day by launching a tree plantation drive in Chennai on Sunday, June 5, 2011, as part of the 100,000 Tree Pledge program the IT major has embarked upon in association with TIST Tree Planting India Private Limited.

More than 225 farmers from Tiruvannamalai and Vellore Districts, who would be planting the 100,000 saplings, were present on the occasion and exchanged knowledge and best practices with each other.

The branch manager of Pallavan Grama Bank was among the special invitees and shared his thoughts on how farmers can effectively utilize the facilities of the bank to improve their livelihood.

Around 50 employees of Cognizant attended the launch to encourage the farmer participants of the program. They praised the farmers for helping the cause of the environment and promised all possible support.

Cognizant employees distributed seedlings to TIST farmers and also joined them in planting teak saplings. The TIST farmers reciprocated by gifting flowering plants to Cognizant employees.













## காகனிசான்ட் மற்றும் TIST நிறுவனம் 100,000 மரக்கன்றுகளை நடும் நிகழ்ச்சி துவக்கம்

கடந்த ஞாயிறு ஜூன் 5, 2011 அன்று உலக சுற்றுப்புற சூழல் தினத்தில், காகனிசன்ட் நிறுவனம் TIST நிறுவனத்துடன் இணைந்து 100,000 மரக்கன்றுகளை நடும் நிகழ்ச்சியை தொடங்கியது.

மேலும் திருவண்ணாமலை மற்றும் வேலூர் மாவட்டங்களிலிருந்து 225 விவசாயிகள் 100,000 இளஞ்செடிகளை நடும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டும் அவர்களது அறிவை மற்றவர்களுடன் பகிர்ந்து கொண்டனர்.

சிறப்பு விருந்தினர் பல்லவன் கிராம வங்கியின் கிளை அதிகாரி எப்படி விவசாயிகள் சேவைகளை சரியான வழியில் பயன்படுத்தி அவர்களின் வாழ்க்கை தரத்தைத் முன்னேற்றலாம் என்ற கருத்துகளைப் பகிர்ந்து கொண்டனர்.

எறக்குறைய 50 காக்னீசன்ட் தொழிலாளர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு விவசாயிகளின் பங்கேற்பை ஊக்குவித்தனர். அவர்கள் சுற்றுபுற சூழல் பாதுகாப்பிற்கு காரணம் என்று பாராட்டினர் மற்றும் அவர்கள் TIST விவசாயிகளுக்கு ஆதரவு அளிப்பதாக வாக்குறுதி அளித்தனர்.

காக்னிசன்ட் தொழிலாளர்கள், TIST விவசாயிகளுக்கு விதைகள் மற்றும் தேக்கு மரக் கன்றுகளை வினியோகித்தனர்: TIST விவசாயிகள் பதிலுக்கு பூச்செடிகளை பரிசாக வினியோகித்தனர்

## டிஜஎஸ்டி நிகழ்வில் பங்குகொள்ள அங்கத்தினர்கள் பூர்த்தி செய்ய வேண்டிய தகுதிகள்

1. ஒவ்வொரு சிறு குழுவிலும் குறைந்தது மூன்று வெவ்வேறு குடும்பங்களை சார்ந்த 6 முதல் 12 உறுப்பினர்கள் இருக்க வேண்டும்.

2. ஒவ்வொரு சிறு குழுவும் குறைந்தது 1,000 உயிர் மரங்களை, டிஜஎஸ்டியில் சேர்ந்த ஒரு வருடத்திற்குள் வளர்க்க வேண்டும்.

3. டிஜஎஸ்டியில் சேர்ந்து ஐந்து வருடங்களுக்குள் குறைந்தது 5,000 உயிர் மரங்களை கொண்டிருக்க வேண்டும்.

4. உங்கள் சிறு குழு ஒவ்வொரு வருடமும் 20, வருடங்களுக்கு அழிந்த அல்ல விழுந்தபோன மரங்களின் இடத்தில் புதிய மரங்களை வளர்க்க வேண்டும்.,

5. எல்லா சிறு குழுவும் கீரீன்ஹவுஸ் உடன்படிக்கையில் கையெழுத்திட வேண்டும்.

6. டிஜஎஸ்டி ஒரு வருடத்திற்கு ஒரு உயிர் மரத்திற்கு ரூ.1.50 (US $0.03) கொடுக்கும் (கீரீன் ஹவுஸ் உடன்படிக்கையை படித்து மேலும் விவரங்களை தெரிந்து கொள்ளுங்கள்).

7. புதர்கள் அல்லது 4மீ உயரத்திற்கு குறைவாக வளரும் இனவகை மரங்களை டிஜஎஸ்டி மரமாக கணக்கில் எடுத்து கொள்ளாது.

8. 2மீஇடைவெளிக்கும் குறைவாக பயிரிடப்படும் மரங்கள் கணக்கில் எடுக்க இயலாது.

9. 10 வருடங்கள் அதற்கு மேல் வளர்ந்த மரங்களையே டிஜஎஸ்டி அறுவடை செய்ய அனுமதியளிக்கும். எனினும் ஒரு வருடத்திற்கு 5 சதவிகிதத்திற்கு மேலாக அறுவடை செய்ய கூடாது.

10. ஒவ்வொரு சிறு குழுவும் 33 சதவிகிதத்திற்கும் குறைவாகவே குறுகியகால மரங்கள் இருக்கவேண்டும். (உ.த. தைலமரம்) தற்பொழுதிய குழுக்கள் 33 சதவிகிதத்திற்கு மேல் குறுகியகால சுழற்சி முறை மரங்களை வளர்ப்பின் அவர்கள் 5 வருடம் (2012) வரை கூடுதலான மரங்களை வளர்க்க காலம் கொடுக்கப்படும். அல்லது இந்த தகுதியடையும் வரை மரங்களை அறுவடை செய்ய இயலாது.

11. டிஜஎஸ்டி சிறு குழுக்கள் ஆண்டிற்கு ஒரு முறை கட்டாயமாக ஆய்வாளர்களை அழைத்து தங்கள் தோப்பினை ஆய்வு செய்து கொள்ள வேண்டும். இவர்கள் மற்ற சிறு குழுவினரோடு சேர்ந்து ஆய்வின் பொழுது, ஆய்வாளர்களுக்கு உணவும், தங்கும் இடமும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

12. சிறு குழு அங்கத்தினர் ஒன்றாக கூடி தங்களின் பயிற்சி முறைகளையும். ஆலோசனைகளையும் பகிர்ந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு வாரமும் சந்திக்க இயலாவிட்டால் மாதம் ஒரு முறையாவது சந்திக்க வேண்டும்.

13. சிறு குழு அங்கத்தினர் தாங்கள் மரங்களை வளர்க்கும் நிலத்தின் உரிமை சான்றினை அளிக்க வேண்டும்.

14. குழுவின் அங்கத்தினர்கள் டிஜஎஸ்டி பயிற்சியில் பங்கு கொண்டு மற்ற குழுக்களுடன் தங்களின் சிறப்பு பயிற்சி முறைகளை பகிர்ந்து கொள்ளவேண்டும்.

15. உங்கள் சிறு குழு உள்ள பகுதியில் மற்ற சிறு குழுக்களும் நடந்து செல்லும் தூரத்தில் அமைந்திருக்க வேண்டும். ஒரு வருடத்திற்குள் 100,000 மரங்களும் 5 வருடங்களுக்குள் 300,000 மரங்கள் வளர்க்ளும் தகுதியும் கொண்டிருக்க வேண்டும்.